## உதய் திட்டத்தில் சேர்ந்தது – தொடர்பாக

*****

### 1. உதய் திட்டம் என்றால் என்ன ?

நலிவடைந்த மின்பகிர்மான நிறுவனங்களை முன்னேற்றும் நோக்கத்தில், நடுவண் அரசு 20.11.2015 அன்று உதய் என்ற திட்டத்தை அறிவித்தது. அத்திட்டத்தில், நிதி மேம்பாடு மற்றும் செயல்திறன் மேம்பாடு குறித்த அம்சங்கள் உள்ளடங்கியுள்ளது.

**உதய் திட்டத்தின் அம்சங்கள்**

i) மின்பகிர்மான கழகத்தின் 30.09.2015ன்படி கடன்களில் 75 விழுக்காடுகளை மாநில அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.

ii) மாநில அரசு 10 முதல் 15 ஆண்டு முதிர்வு காலம்கொண்ட நிதி பத்திரங்களை (Non-SLR including SDL Bonds) வெளியிட வேண்டும்.

iii) அதன்மூலம் பெறப்படும் தொகையை மின்பகிர்மான கழகத்தின் கடன்களை அடைப்பதற்கு வழங்க வேண்டும்.

iv) எதிர்காலத்தில் மின்வாரியத்திற்கு ஏற்படும் இழப்புகளை மாநில அரசு ஈடு செய்ய வேண்டும்.

v) மின்வாரியம் செயல்திறன் மற்றும் நிதித்திறனை மேம்படுத்த காலாணடுக்கொருமுறை மின் கட்டணத்தை மாற்றி அமைத்தல், தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பினை (AT & C Losses) 15 சதவிகித அளவிற்கு குறைத்தல், சராசரி மின்விற்பனை விலை மற்றும் மின் வழங்கும் விலைக்குண்டான இடைவெளியை பூஜ்ஜியமாக குறைத்தல், உயர்தர அளவீட்டு கருவிகள் பொருத்துதல் மற்றும் பிற வகையில் வழிவகை செய்யப்பட வேண்டும்.

## <u>2. மாண்புமிகு முதலமைச்சர் உதய் திட்டத்தில் கோரிய மாற்றங்கள் என்ன ?</u>

உதய் திட்டத்தின் அம்சங்கள் குறித்த குறிப்புரை ஒன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு 19.10.2015 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு 23.10.2015 ஆம் தேதியிட்ட கடிதத்தில், உதய் திட்டத்தில் கீழ்கண்ட மாற்றங்கள் செய்ய கோரியிருந்தார்கள்.

அ. மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் கடன்களுக்கான நிதிப்பத்திரங்களின் முதிர்வு காலங்கலான 15 ஆண்டுகளுக்கு நிதி பொறுப்பு மற்றும் வரவு செலவு மேலாண்மை (Fiscal Responsibility Budget Management (FRBM)) மீதான கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும்.

ஆ. மாநில அரசு 15 ஆண்டுக்கால நிதி பத்திரங்களை (விடுமுறை காலம் 5 ஆண்டுகள் உள்ளடக்கி) வெளியிடவும் மற்றும் மாநில அரசு நிதி பத்திரத்தின் வட்டி தொகையை விட 20 அடிப்படை புள்ளிகள் மிகாமல் அவ்வப்போது மாறக்கூடிய வட்டி (Floating rate) விகிதம் கொண்ட நிதிப் பத்திரங்கள் வெளியிடவும் மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

இ. மத்திய அரசு 2012ல் நடைமுறைப்படுத்தப்பட்ட நிதி மறு சீரமைப்புத் திட்டத்தில் உள்ளது போலவே, உதய் திட்டத்திலும், 25 சதவீதத்தை மானியமாக வழங்குதல் வேண்டும்.

ஈ. மின்பகிர்மான கழகத்தில் உதய் திட்டம் அமல் செய்யப்பட்ட தொடக்க காலங்களில் பணஇழப்பு ஏற்படுவதை ஈடுகட்டும் விதத்தில், எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு மின்பகிர்மான கழகத்திற்கு வங்கிகள் மூலம் 50 விழுக்காடு பணஇழப்பு அளவிற்கு கடன் வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

உ. உதய் திட்டத்தை செயல்படுத்தும் கால அளவை மேலும் 1 வருடத்திற்கு நீட்டிக்க வேண்டும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 14–06–2016 அன்று மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களை சந்தித்து, உதய் தொடர்பான மேற்கண்ட மாற்றங்கள் குறித்த கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்தும் குறிப்பினை சமர்ப்பித்தார்கள். மேலும், எரிபொருள் செலவில் ஏற்படும் மாற்றங்களை ஈடு செய்ய மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டணங்களை மாற்றியமைக்க கோரும் நிபந்தனையை நீக்குமாறும் வலியுறுத்தினார்கள்.

மாநிலங்களுக்கான எரிசக்தி, நிலக்கரி, சுரங்கத்துறை, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை வகிக்கும் மத்திய அமைச்சர் 15–07–2016 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்தார். அந்த சந்திப்பின்போதும், மாண்புமிகு முதலமைச்சர் உதய் தொடர்பான மாற்றங்களை வலியுறுத்தியும், எரிபொருள் செலவில் ஏற்படும் மாற்றங்களை ஈடு செய்ய மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மின்கட்டணங்களை மாற்றியமைக்க வலியுறுத்தும் நிபந்தனையை நீக்குமாறும் வலியுறுத்தினார்.

## 3. மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றங்கள்

மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, மாநில மின்துறை அமைச்சரின் தலைமையில் நிதித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், எரிசக்தித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு மின் வாரியத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், நிதித்துறையின் துணைச் செயலாளர் மற்றும் மின்வாரியத்தின் அலுவலர்கள் உள்ளடக்கிய குழு, மாநிலங்களுக்கான மத்திய எரிசக்தி, நிலக்கரி, சுரங்கத்துறை, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை வகிக்கும் மத்திய அமைச்சரை 21.10.2016 அன்று புதுடில்லியில் சந்தித்தது.

இச்சந்திப்பின்போது உதய் தொடர்பான கீழ்கண்ட அம்சங்கள் விவாதிக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வலியுறுத்தியதற்கிணங்க காலாண்டுக்கொருமுறை மின்கட்டணத்தை மாற்றியமைக்கும் விதிமுறையை நீக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஆ. தமிழக அரசு வெளியிடும் நிதிப்பத்திரங்களை 15 வருட காலத்திற்கு வெளியிட அனுமதி அளிக்கப்பட்டது. அதே நேரத்தில் வட்டி விகிதம் அவ்வப்போது மாறுபடும் வகையில் (Floating rate) நிதிப்பத்திரம் வெளியிட வங்கிகளுடன் ஆலோசிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இ. FRBM கட்டுப்பாடுகளை நிதி பத்திரங்களின் முதிர்வு ஆண்டுகள் வரை தளர்த்த மீண்டும் வலியுறுத்தப்பட்டது. அத்தகைய FRBM தளர்வு, கடன்களை ஏற்றுக்கொள்ளும் ஆண்டுகளுக்கு மட்டும் (அதாவது 2016–17) அளிக்கப்படும் என்று மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

ஈ. தமிழக மின்வாரியத்தின் நிதிநிலை சீராகும்வரைக்கும் நிதிநிறுவனங்களும், வங்கிகளும் எதிர்வரும் ஆண்டுகளில் ஏற்படும் இழப்பிற்கான கடனுதவி அளிக்க வேண்டுமென அக்கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது. மத்திய மின் அமைச்சர், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் குறுகிய கால கடன் மற்றும் வருவாய் இழப்பிற்கான கடன்களை வழங்கும் என தெரிவித்தார்.

உ. உதய் திட்டத்தை செயல்படுத்தும் கால அளவு **31.03.2017** வரை நீட்டிக்கப்பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையான மின்கட்டண மாற்றங்கள் செய்யக்கோரும் நிபந்தனையை நீக்கக் கோரினார்கள். இதனை மத்திய அரசு ஏற்றுக்கொண்ட பின்புதான் உதய் திட்டத்திற்கான முத்தரப்பு ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திட்டது.

## <u>4. தமிழக மின்வாரியத்தில் நிதிநிலைமை மேம்பாடு ஏற்பட்டுள்ளதா ?</u>

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கடந்த **2015–16**ம் ஆண்டு குறிப்பிடத்தக்க அளவு நிதி மேம்பாடு அடைந்துள்ளது. **2014–15**ம் ஆண்டின் வருவாய் பற்றாக்குறை ரூ.**12,750** கோடியிலிருந்து, **2015–16**ம் ஆண்டில் ரூ.**5780** கோடியாக குறைக்கப்பட்டது. இதன் காரணமாக, மின்விற்பனை விலை மற்றும் மின் வழங்கும் விலைக்குண்டான இடைவெளி யூனிட் ஒன்றிற்கு ரூ.**1.66**லிருந்து **72** பைசாவாக குறைந்தது. குறைந்த விலையில் கிடைக்கும் மின்சாரம், செயல்திறன் மேம்பாடு, போன்றவற்றை கவனத்தில்கொள்ளும்போது, மின்வாரியத்தின் வருவாய் பற்றாக்குறை **2016–17**ம் ஆண்டில் தோராயமாக ரூ.**3000** கோடியாக மேலும் குறையும்.

## 5. உதய் திட்டத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு என்ன ?

30.09.2015–ம் நாளில் உள்ள நிலவரப்படி தமிழக மின்வாரியத்தின் மொத்த கடன் தொகை ரூபாய் 81,312/– கோடி. இதில் மின்பகிர்மானம் தொடர்பான கடன்கள் ரூபாய் 36,833 கோடி. தமிழக அரசால் உதய் திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படும் கடன் தொகை ரூபாய் 30,420/– கோடி. இதில் 75 சதவீத கடன்களான ரூபாய் 22,815/– கோடியை தமிழக அரசு எடுத்துக் கொண்டு நிதிப் பத்திரங்களாக வெளியிடும். மீதமுள்ள 25 சதவீத கடன்களான ரூபாய் 7,605/– கோடிக்கு தமிழக மின்வாரியமே கடன் பத்திரங்களை வெளியிட்டு கடன்களை திருப்பி செலுத்தும்.

## 6. முத்தரப்பு ஒப்பந்தத்தின் மூலம் தமிழக மின் வாரியத்திற்கான பயன்கள் என்ன ?

தமிழக அரசு ரூபாய் 22,815/– கோடி கடனை ஏற்றுக் கொள்வதால், தமிழக மின்வாரியத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூபாய் 2,882/– கோடி வட்டி சேமிப்பும், கடன் திருப்பி செலுத்துதலை தவிர்ப்பதன் மூலம் ரூபாய் 2,282/– கோடி பணப்புழக்கத்தில் சேமிப்பும் ஏற்படும். தமிழக மின்வாரியம், மீதமுள்ள ரூபாய் 7,605/– கோடி கடனை நிதிப்பத்திரங்கள் மூலம் திருப்பி செலுத்துவதினால் ஆண்டொன்றிற்கு ரூபாய் 200/– கோடி வட்டி சேமிப்பு ஏற்படும்.

**7. உதய் திட்டத்தினால் மின் கட்டணத்தில் மக்களை பாதிக்கும் வகையில் எவ்வித உயர்வும் ஏற்படாது.**

உதய் திட்டத்தினால் தமிழக மின்வாரியத்திற்கு வட்டி சேமிப்பு மற்றும் கடனை திருப்பி செலுத்தும் வகையிலும் பணப்புழக்கம் அதிகரிப்பதனால், மின்வாரியத்தின் பற்றாக்குறை 2017–18 ஆம் ஆண்டில் ரூபாய் 1,500/– கோடியாக குறையும். தமிழக மின் வாரியம் 2018–19 ஆம் ஆண்டிலேயே வருவாய் பற்றாக்குறை இல்லாமல் இலாபம் ஈட்டும். இதன் காரணமாக மின் கட்டணத்தில் மக்களை பாதிக்கும் வகையில் எவ்வித உயர்வும் ஏற்படாது.

**8. உதய் திட்டத்தில் செயல்திறன் மேம்படுத்த கோரும் அம்சங்கள் யாவை ?**

அ. விவசாய மற்றும் குடிசை மின்நுகர்வோர்களுக்கு மின் அளவிகள் (Meters) பொருத்தப்பட மாட்டாது. தற்போதைய நிலை நீடிக்கும்.

ஆ. வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் 100 யூனிட்டுகள் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும்.

இ. கைத்தறி மின் நுகர்வோர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 200 யூனிட்டுகள் இலவச மின்சாரமும், மற்றும் விசைத்தறி மின் நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 750 யூனிட்டுகள் இலவச மின்சாரமும் தொடர்ந்து வழங்கப்படும்.

ஈ. டிசம்பர் 2019–க்குள் மாதம் 200 யூனிட்டுக்கு மேல் உபயோகப்படுத்தும் அனைத்து நுகர்வோர்களின் (விவசாய மற்றம் குடிசை மின்நுகர்வோர்கள் தவிர) மின் இணைப்புகளில் Smart Meter என்ற உயர்தர அளவீட்டுக் கருவிகள் பொருத்தவேண்டும்.

உ. தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பினை (AT&C losses) தற்போதுள்ள 14.58 சதவிகிதத்திலிருந்து 13.50 சதவிகிதம் அளவிற்கு எதிர்வரும் 2018–19 ஆம் ஆண்டிற்குள் குறைத்தல் வேண்டும்.

**9. முத்தரப்பு ஒப்பந்தத்தில் மத்திய அரசு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் என்ன ?**

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, மின் உற்பத்தி செலவை குறைப்பதற்கு மத்திய அரசு கீழ்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அ. உள்நாட்டு நிலக்கரியின் ஒதுக்கீட்டை அதிகரித்தல்.

ஆ. குறைந்த திறனில் செயல்படும் மின் நிலையங்களுக்கு அளிக்கப்பட்ட நிலக்கரி ஒதுக்கீட்டை, திறன் மிகு மின் நிலையங்களுக்கு மாற்றி தருதல் மற்றும் நிலக்கரி ஒதுக்கீட்டை சீர்படுத்தி அமைத்தல்.

இ. நிலக்கரியின் மொத்த வெப்பக் குறியீட்டின் அடிப்படையில் (Gross Calorific value) விலையை சீர்செய்தல்.

ஈ. அதிக அளவில் மின் கடத்தல் செய்ய ஏதுவாக மின் வழித் தடங்கள் விரைவாக அமைத்தல்.